நவீன கால்நடை மருத்துவத்தையும் பாரம்பரிய மருத்துவத்தையும் ஒருங்கிணைந்து செய்து வரும் போது விரைவாக பலனைப் பெற முடியும். மாடுகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் பாரம்பரிய பொருட்களை வழங்கும் போது விரைவாக குணமடைகின்றன.

### பெரியம்மை தடுப்பூசி

அனைத்து கால்நடை வளர்ப்போர்களும், நான்கு மாதங்களுக்கு மேல் வயதுடைய தங்களது பசுவினங்களுக்கு தவறாமல் பெரியம்மை (LSD Vaccine) தடுப்பூசியினை செலுத்தி, தங்கள் கால்நடைகளை இந்நோய் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ளலாம்.




மேலும் விபரங்களுக்கு

ICAR - **வேளாண்மை அறிவியல் மையம்**

எலுமிச்சங்கிரி, கிருஷ்ணகிரி - 635120.

தொலைபேசி: 04343 291944, 80982 80123

http://www.krishnagirikvk.org/


# மாடுகளை பெரியம்மை நோயிலிருந்து காப்போம்!!!

தோல் கழலை நோய்/லம்பி நோய் என்பது கால்நடைகளுக்கு எளிதில் பரவக்கூடிய வைரஸ் தொற்று நோய் ஆகும். தோல் கழலை நோய் என்பது பாக்ஸ் விரிடேயின் குடும்பத்தைச் சேர்ந்த கேப்ரிபாக்ஸ் வைரஸினால் ஏற்படுகிறது.

**நோய் பரவும் முறைகள்:**

- பாதிக்கப்பட்ட கால்நடைகளில் (பசு மற்றும் எருமை) இருந்து கொசுக்கள், ஈக்கள், பேன்கள் மற்றும் புற ஒட்டுண்ணிகள் மூலம் மற்ற ஆரோக்கியமான கால்நடைகளுக்கு பரவுகிறது.
- கொசு, ஈ, உண்ணி கடி மற்றும் பாதிக்கப்பட்ட மாடு மூலமாகவும், பால் கறவையாளர்கள் மூலமாகவும் இந்நோய் பரவுகிறது.
- இந்த நோய் வைரஸ் கிருமியானது மாட்டின் தோல் மற்றும் காயங்களில் 18 முதல் 35 நாட்கள் வரை வாழும். கன்று குட்டிகள் பாதிக்கப்பட்ட மாட்டின் பாலை அருந்தும் போதும் நோய் தொற்று ஏற்படுகிறது.
- கோடைகாலத்தில் இந்நோய் அதிக அளவில் பரவுகிறது. இந்நோய் தொற்று 60 சதவீதம் வரை மாடுகளை பாதிக்கிறது. இதனால் பால் உற்பத்தி குறையும். சினை பிடிப்பதில் பாதிப்புகள் ஏற்படும்.

**நோய் அறிகுறிகள்**

- இந்த நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு கடுமையான காய்ச்சல் இருக்கும். கண்ணில் நீர்வடிதல் மற்றும் மூக்கில் சளி ஒழுகுதல் போன்றவை ஆரம்ப அறிகுறிகள் ஆகும்.
- உடல் முழுவதும் உருண்டை, உருண்டையாக வீக்கம் காணப்படும். உருண்டையாக உள்ள கட்டிகள் உடைந்து சீல் வெளியேறும். இந்த கட்டியின் அகலம் 0.5 முதல் 5.0 செ.மீட்டர் வரை இருக்கும்.
- நிணநீர் சுரப்பிகள் பெரியதாக காணப்படும். கால்கள் வீங்கி இருக்கும். மாடுகள் சோர்வாக காணப்படும்.
- தீவனம் சரியாக உட்கொள்ளாமல் உடல் எடை குறைந்து காணப்படும். காயங்களால் மாட்டின் தோல் முற்றிலும் பாதிப்படையும். இளம் சினை மாடுகளில் கருச்சிதைவு ஏற்பட வாய்ப்புள்ளது. சினை மாடுகளில் மடிநோய் ஏற்படவும் வாய்ப்புள்ளது. அதிக அளவில் நோய் தொற்று

**நோய்த்தடுப்பு முறைகள்:**

- ✓ பாதிக்கப்பட்ட கால்நடைகளை ஆரோக்கியமான கால்நடைகளிடம் இருந்து தனிமைப்படுத்திட வேண்டும்.
- ✓ மேய்ச்சலுக்கு அனுப்புவதை தடுத்திட வேண்டும். கொசுக்கள், ஈக்கள், உண்ணிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் நோய் பரவுவதை தடுக்கலாம்.
- ✓ பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு தீவனம் மற்றும் தண்ணீர் பாத்திரம் தனியாக இருக்க வேண்டும். கறவையாளர்கள் பாதிக்கப்பட்ட மாடுகளை தொட நேர்ந்தால் உடனடியாக கைகளை கிருமி நாசினியால் சுத்தம் செய்த பிறகே மற்ற மாடுகளை தொடவேண்டும்.
- ✓ சுற்றுப்புறச்சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

## நோய்க்கான முதலுதவி மூலிகை மருத்துவம்:

அ. வாய் வழி மருந்து

① முதல் மருந்துவம்:

*தேவையான பொருட்கள் (ஒரு முறை கொடுக்க - ஒரு டோஸ்)*

வெற்றிலை - 10 எண்ணிக்கை, மிளகு - 10 கிராம்,
உப்பு - 10 கிராம், வெல்லம் - தேவையான அளவு

*தயாரிப்பு முறை*

- வெற்றிலை, மிளகு, உப்பு இவற்றை பசையாக அரைக்கவும். அதனுடன் வெல்லம் சேர்க்கவும்
- அரைத்த கலவையை சிறிது சிறிதாக வாய் வழியாக கொடுக்கவும்
- முதல்நாள் (நாள்-1) - மூன்று மணி நேரத்திற்கு ஒருமுறை (ஒரு டோஸ்) கொடுக்கவேண்டும்.
- இரண்டாம் நாள் முதல் - ஒரு நாளைக்கு மூன்று முறை (3 டோஸ்) வீதம் இரண்டு வாரங்கள் கொடுக்கவும்
- ஒவ்வொரு முறையும் இதனை புதியதாக தயாரிக்க வேண்டும்.

② இரண்டாம் மருந்துவம்:

*தேவையான பொருட்கள் (இரண்டு முறை கொடுக்க - இரண்டு டோஸ்)*

பூண்டு - 2 பல், கொத்தமல்லி விதை - 10 கிராம், ஜீரகம் - 10 கிராம், துளசி - 1 கைப்பிடியளவு, இலவங்கப்பட்டையின் காய்ந்த இலைகள் - 10 கிராம், மிளகு - 10 கிராம், வெற்றிலை - 5, சின்னவெங்காயம் - 2, மஞ்சள் துள் - 10 கிராம், நிலவேம்பு இலையின் பவுடர் - 30 கிராம், திருநீற்று பச்சிலை - 1 கைப்பிடியளவு, வேப்பிலை - 1 கைப்பிடியளவு, வில்வமர இலை -1 கைப்பிடியளவு, வெல்லம் - 100 கிராம்.

*தயாரிப்பு முறை*

- மேற்கூறியவற்றை அரைத்து, அதனுடன் வெல்லம் சேர்க்கவும்.
- அரைத்த கலவையை சிறிது சிறிதாக வாய் வழியாக கொடுக்கவும்.
- முதல்நாள் (நாள்-1) - மூன்று மணி நேரத்திற்கு ஒருமுறை (ஒரு டோஸ்) கொடுக்கவேண்டும்.
- இரண்டாம் நாள் முதல் - தினமும் 2 வேளை (2 டோஸ்), காலை ஒருமுறை (1 டோஸ்), மாலை ஒருமுறை (1 டோஸ்) வீதம் நோய் சரியாகும் வரை கொடுக்கவேண்டும்.
- ஒவ்வொரு முறையும் இதனை புதியதாக தயாரிக்க வேண்டும்.

ஆ. வெளிப்புற பயன்பாட்டிற்கு மட்டும்
(ஏதேனும் புண்கள் இருந்தால்)

*தேவையான பொருட்கள்*

குப்பைமேனி கீரை இலை - 1 கைப்பிடியளவு, பூண்டு - 10 பல், வேப்பிலை - 1 கைப்பிடியளவு, தேங்காய் எண்ணெய் (அ) நல்லெண்ணை - 500 மில்லிலிட்டர், மஞ்சள் தூள் - 20 கிராம், மருதாணி இலை - 1 கைப்பிடியளவு, துளசி - 1 கைப்பிடியளவு

*தயாரிப்பு முறை*

- அனைத்து பொருட்களையும் நன்றாக அரைக்கவும்
- அரைத்த கலவையுடன் 500 மில்லிலிட்டர் தேங்காய் எண்ணெய் (அ) நல்லெண்ணெய் கலந்து கொதிக்கவைத்து ஆற வைக்கவும்.
- ஒருவேளை புண்ணில் புழுக்கள் இருந்தால் முதலாவது நாள்மட்டும் தேங்காய் எண்ணெயில் கற்பூரத்தை கலந்து அதை தடவவும். அல்லது சீதாப்பழ மர இலைகளை அரைத்து பேஸ்டாக்கித் தடவவும்.